### தருமபுரி மாவட்டத்தில் வேலைவாய்ப்பு – தொழிலை ஊக்குவிக்கும் வகையில்

# உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை திட்டத்தின் செயல்பாடுகள் என்ன?

## நாடாளுமன்றத்தில் ஆ. மணி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 24 -

தருமபுரி போன்ற வளர்ந்து வரும் தொழில் துறை பகுதிகளில் வேலை வாய்ப்பு மற்றும் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (PLI) திட்டத்தின் செயல்பாடுகள் என்ன? என நாடாளுமன்றத்தில் வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பியுள்ளார்.



நாடாளுமன்ற குளிர் கால கூட்டத்தொடரில் பங்கேற்று பேசிய தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை(PLI) திட்டத்தின் முதன்மை நோக்கங்கள் மூலம் தமிழ்நாட்டின் தொழில்துறையின் வளர்ச்சி குறித்த விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் மூலம் பல்வேறு துறைகளின் கீழ் உருவாக்கப்பட்டு தருமபுரி மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளிலும் ஏதேனும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

மேலும் தருமபுரி போன்ற தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய மாவட்டங்களில் தொழித்துறையை ஊக்குவிக்க அதன் மூலம் அப்பகுதிகளில் வேலை வாய்ப்பினை உருவாக்க உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத் தொகை (PLI) திட்டத் தின் மூலம் விரிவாக்கம் செய்ய ஒன்றிய அரசு முன்மொழிகிறதா? அப்படியானால் அதற்காக ஒன்றிய அரசு எடுத்துள்ள அல்லது முன்மொழிந்துள்ள நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

இவ்வாறு வணிகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாத்திடம் கேள்வி எழுப்பி உள்ளார்.

### அருங்காட்சியகத் தொகுப்புகளை டிஜிட்டல் வடிவமாக மாற்றுவதற்கு

# இதுவரை ஒப்புதல் பெற்ற திட்டங்களின் விவரங்கள் என்ன?

## மக்களவையில் – கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 24 -

பண்பாட்டு கலாச்சாரத் துறை அமைச்சரிடம் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் எழுப்பியுள்ள கேள்வி வருமாறு:-



இந்தியாவில் உள்ள அருங்காட்சியக தொகுப்புகளை டிஜிட்டல் வடிவமாக மாற்றுவதற்கான நிதி உதவி திட்டத்தின் கீழ் அதன் துவக்கத்திலிருந்து இதுவரை ஒப்புதல் பெற்ற திட்டங்களின் விவரங்களை தெரிவிக்குமாறும் மாநிலம் மற்றும் மாவட்ட வாரியாக அருங்காட்சியகத்தின் வகை (மாநில அரசு நடத்தும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், தனியார் நிறுவனங்கள், தொண்டு அறக்கட்டளைகள்) நடத்தும் ஒதுக்கப்பட்ட நிதியுடன் சேர்த்து திட்டத்தின் நிலை முடிக்கப்பட்டது, நடந்து கொண்டிருப்பது, திட்டமிடப்பட்டது ஆகிய அடிப்படையில் வகைப்படுத்தி வழங்குமாறு கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் பண்பாட்டு அமைச்சகம் களஞ்சிய தொகை திட்டம் என்ற ஒரு திட்டத்தை செயல்படுத்துகிறது. இந்த திட்டத்தின் கீழ் புதிய அருங்காட்சியகங்களை அமைக்கவும் ஏற்கனவே உள்ள அருங்காட்சியகங்களை மேம்படுத்தவும் அருங்காட்சியக சேகரிப்புகளை டிஜிட்டல் வடிவமாக்கவும் மேலும் அருங்காட்சியக தொழில்நுட்ப நிபுணர்களுக்கான பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு நடவடிக்கைகளுக்கான நிதி உதவி வழங்கப்படுகிறது. இந்த நிதி உதவியை மாநில/ ஒன்றிய அரசு பொதுத் துறை நிறுவனங்கள், சமூகங்கள், தன்னாட்சி அமைப்புகள், உள்ளாட்சி நிறுவனங்கள், அறக்கட்டளைகள் போன்றவை பெறலாம். இந்த நிதி உதவிக்கு விண்ணப்பிக்க அமைச்சகத்திடம் தேவையான ஆவணங்களுடன் கூடிய ஒரு பரிந்துரை விண்ணப்பம் அளிக்க வேண்டும்.

2. 2013 - 4ஆம் ஆண்டு இந்த திட்டம் தொடங்கியதில் இருந்து இந்நாள் வரை (மாநில அரசுகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், தன்னார்வு நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள்) இயக்கும் அருங்காட்சியங்களை டிஜிட்டல் வடிவமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் இதுவரை வழங்கப்பட்ட தொகைகள் ஆகிய விவரங்கள் அ னைத்தும் அனெக்சர் என்ற இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

### கல்வி நிதி வழங்காமல்

# எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு அநீதி!

## நாடாளுமன்றத்தில் – கணபதி ராஜ்குமார் எழுப்பிய கேள்வியால் அம்பலம்!

புதுடெல்லி, ஜூலை 24 -

கல்வி நிதி வழங்காமல் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு ஒன்றிய பா.ஜ.க., அரசு தொடர்ந்து அநீதி இழைத்து வருகிறது. அந்தவகையில், கடந்த நிதி ஆண்டில் தமிழ்நாடு உள்ளிட்ட 3 மாநிலங்களுக்கு ஒன்றிய அரசின் கல்வி நிதியாக ஒரு பைசா கூட ஒதுக்கப்படவில்லை.



ஒன்றியத்தில் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க., அரசு அமைந்தது முதல், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. உரிய நிதி ஒதுக்கப்படாமல் வஞ்சிக்கப்படுகின்றன.

இந்நிலையில், நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய திமுக எம்.பி., கணபதி ராஜ்குமார், மாநிலங்களுக்கு ஒன்றிய அரசால் எவ்வளவு கல்வி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறித்த தகவலை வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

இதற்கு ஒன்றிய அரசு எழுத்துப்பூர்வமாக பதிலளித்துள்ளது. அதில், கல்விக்காக சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களுக்கு கடந்த நிதி ஆண்டில் ஒரு ரூபாய் கூட ஒன்றிய அரசு நிதி ஒதுக்கவில்லை என்பது அம்பலமாகியிருக்கிறது.


அதேநேரத்தில் பா.ஜ.க., மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு மட்டும் பல்லாயிரம் கோடி ரூபாய் கல்வி நிதி வழங்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. ஒன்றிய அரசின் இந்த செயலுக்கு அரசியல் கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மாற்றந்தாய் மனப் போக்கை கைவிட்டு, அனைத்து மாநிலங்களையும் ஒன்றாக பாவித்து உரிய கல்வி நிதியை ஒதுக்கி விடுவிக்க வேண்டும் என்றும் அரசியல் கட்சியினர் வலியுறுத்தியுள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாகை கே.வி. இராமன்

### ஜூலை 24 (2009)



**கழகம் துவங்கிய காலத்தில் நாகப்பட்டினம் நகரக் கழகத்தின் முதல் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து இருபது ஆண்டுகள் நகரச் செயலாளராகவும் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**நாகை மாவட்டம் முழுவதும் ஏராளமான கிளைக் கழகங்கள் ஏற்படுத்தியதுடன், தமிழகத்திலேயே அதிக படிப்பகங்கள் துவக்கி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டையும், தலைவர் கலைஞர் அவர்களின் அன்பையும் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறைக்குச் சென்றவர்.**

**பிராமணர் சமூகத்தைச் சேர்ந்த இவர் 1964ஆம் ஆண்டிலேயே தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### வேளாண்மை – செயலாக்க உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தை சீரமைத்து

# தமிழகத்தில் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

## மக்களவையில் வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 24-

மக்களவையில் வேலூர் தொகுதி கழக உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் அவர்கள், நேற்று முன்தினம் (22.07.2025) இந்தியாவின் வேளாண்மை மற்றும் செயலாக்க உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) அமைப்பின் செயல்திறனை மேம்படுத்தும் தேவையை மையமாகக் கொண்டு, ஒன்றிய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகத்திற்கு நான்கு அம்ச கேள்வியை எழுப்பினார்.



இந்த கேள்வி, தமிழகத்தில் இயற்கை வேளாண்மை மற்றும் ஏற்றுமதிக்கேற்ப பொருட்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகள், சிறு தொழில்கள் மற்றும் தொழில் முனை வோர்களின் சவால்களை பிரதிபலிக்கிறது.

கதிர் ஆனந்த் (வேலூர்) தனது கேள்வியில், APEDA அமைப்பின் வருடாந்திர நிதி பல ஆண்டுகளாக அதிகரிக்கப்படாமல் இருப்பதைக் குறிப்பிட்டார். இது அதன் திட்டங்களை விரிவுபடுத்தவும், பயிற்சி முகாம்கள் நடத்துவது தடையாக இருப்பதைக் குறிக்கிறார்.

மேலும், தற்போது APEDAவில் 15-க்கும் மேற்பட்ட நிரந்தரப் பணியிடங்கள் காலியாக இருப்பது, அமைப்பின் செயல்திறனை பெரிதும் பாதித்து வருகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சென்னை மற்றும் பிற மண்டல அலுவலகங்களில் புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளதா? என்பதைத் தெளிவுபடுத்துமாறு கேள்வி எழுப்பினார்.

இந்தியாவின் ஏற்றுமதி சந்தை விரிவடையும் நிலையில், APEDA அமைப்பு மீளாய்வு செய்து நவீனமயமாக்குவதற்காக திட்டம் மற்றும் அதிக நிதி ஒதுக்கீடு குறித்து ஒன்றிய அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது? என்று அவர் வினவினார்.

மேலும், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர்களை ஏற்றுமதி சந்தைக்குத் தயார்படுத்தும் நோக்கில், APEDA சார்பில் விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பயிற்சி பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளதா? எனவும் கேள்வி எழுப்பினார்.

டி.எம்.கதிர் ஆனந்த் கூறியதாவது:-

“தமிழகத்தில் இயற்கை வேளாண்மை, பழங்கள், காய்கறிகள், தேன், மூலிகைகள் போன்றவை ஏற்றுமதி செய்ய ஏற்றவையாக உள்ளன. ஆனால் APEDA அமைப்பின் செயல்திறன் குறைவாகவே உள்ளது. பணி யிடங்கள் நிரப்பப்படாததும், திட்ட உதவித் தொகைகள் அதிகரிக்கப்படாததும் காரணமாக, இளைஞர்களும் விவசாயிகள் சர்வதேச சந்தைகளுக்குள் நுழைவதற்கான வாய்ப்புகளை இழக்கிறார்கள். இதைத் திருத்தும் வகையில் APEDA அமைப்பை மறுசீரமைத்து, அதன் சேவைகளை தமிழகத்தில் விரிவுபடுத்த ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

இக்கேள்வி, தமிழ்நாட்டின் ஏற்றுமதி வாய்ப்பு கொண்ட மாவட்டங்களில் உள்ள விவசாயிகள், சிறு மற்றும் நடுத்தர நிறு வனங்கள், மற்றும் தொழில்முனைவோர்களுக்கு உலகச் சந்தையை நோக்கிச் செல்லத் தேவையான ஆதரவுகள் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் கேட்கப்பட்டது. APEDA அமைப்பின் ஆட்சி, திட்டமிடல் மற்றும் பயிற்சி அளிக்கும் பொறுப்புகளை நவீன உலக வர்த்தகத் தேவைகளுக்கு ஏற்ப மாற்றும் வகையில் செயல்பட வேண்டும் என்பதை இக்கேள்வி வலியுறுத்துகிறது.

மேற்கண்ட கேள்விகளுக்கான ஒன்றிய அரசின் பதில்களும், செயல்திட்டங்கள் தமிழகத்தின் ஏற்றுமதி வளர்ச்சிக்கான எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கிய அடிப்படையாக இருக்கும்.

இதற்கு ஒன்றிய அரசின் வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் மாநில அமைச்சர் ஜிதின் பிரசாதா எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம்:

15வது நிதிக் குழு ஆணையின்படி 2021-22 முதல் 2025-26 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கும் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்திற்கு (APEDA) ஒன்றிய அரசு ரூ.405.02 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. நிதியின் உகந்த மற்றும் முழுமையான பயன்பாட்டை உறுதி செய்வதற்காக, ஐந்து ஆண்டு காலத்தில் மொத்த ஒதுக்கீடும், திட்டக் காலத்தில் ஆண்டு ஒதுக்கீடுகளும் கிட்டத்தட்ட ரூ.80 கோடி என்று சமமாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளில் APEDAக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டின் விவரம் கீழ்வருமாறு:-

2021-22ல் ரூ. 85 கோடி

2022-23ல் ரூ. 80 கோடி

2023-24ல் ரூ. 80 கோடி

2024-25ல் ரூ. 80 கோடி

2025-26ல் ரூ. 80.02 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

பணியாளர்களின் பணி நீக்கம் / புதிய பதவிகளை உருவாக்குதல் காரணமாக APEDAவில் குரூப்Aவின் கீழ் இயக்குனர், பொது மேலாளர், செயலாளர், துணைப் பொதுமேலாளர், உதவிப் பொதுமேலாளர் உட்பட 21 பதவிகள் மற்றும் குரூப் Bவின் கீழ் மேலாளர், உதவி மேலாளர் ஜூனியர் இந்தி மொழிபெயர்ப்பாளர் உட்பட 05 பதவிகள் என மொத்தம் 26 பதவிகள் தற்போது காலியாக உள்ளன.

மேலும் இந்தப் பதவிகளை நிரப்ப ஆட்சேர்ப்பு செயல்முறை நடந்து வருகிறது.

ஜனவரி 2019-இல் ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட APEDA மறுசீரமைப்பு அறிக்கையின்படி, உதவியாளர்/பண நிர்வாகி பதவிகளுக்கு பதவி உயர்வு தவிர, குரூப் C பதவிகள் காலியாக இருந்தால் (47 காலியிடங்கள்) நிரப்பப்படாது.

APEDA தலைமையகம் மற்றும் சென்னை உட்பட பிற பிராந்திய அலுவலகங்களில் பணியமர்த்துவதற்காக, செப்டம்பர் 2022-இல் APEDAவில் இருபது புதிய பணியிடங்களை அரசு உருவாக்கியுள்ளது. புதிய பதவிகளின் பிரிவு மற்றும் விவரங்கள் பின்வருமாறு:-

பதவியின் பெயர்

இரண்டு துணைப் பொது மேலாளர்,

8 உதவிப் பொது மேலாளர் பதவிகள்,

10 உதவி மேலாளர் பதவிகள் என மொத்தம் 20 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்திய ஒன்றிய அரசின் வணிகத் துறை அமைச்சகம் APEDAவின் செயல்பாடுகள் குறித்து விரிவான மதிப்பாய்வை மேற்கொண்டது மற்றும் APEDA தொடர்பான மறுசீரமைப்பு அறிக்கையை ஜனவரி 2019-இல் அங்கீகரித்தது. இந்த அறிக்கையில் பல்வேறு நிலைகளில் பதவிகளை உருவாக்குதல், தேர்ந்த நிபுணர்களை ஈடுபடுத்துதல், மறு பதவி நியமனம் மற்றும் அதே ஊதிய நிலைகளில் பதவிகளை இணைத்தல், APEDAவின் புதிய பிராந்திய அலுவலகங்களைத் திறத்தல், குழு C பதவிகளை நிறுத்துதல் போன்ற பல்வேறு பரிந்துரைகள் அடங்கும்.

APEDA, அதன் தலைமையகம் மற்றும் சென்னையில் உள்ள பிராந்திய அலுவலகம் மூலம் மாநில அரசுத் துறை அதிகாரிகள், விவசாயிகள் மற்றும் விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs), பெண்கள் உட்பட மாநிலத்தின் பல்வேறு பங்குதாரர்களுக்கு பயிற்சி, உணர்திறன், தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்பாடு செய்து வருகிறது.

வேளாண் மற்றும் பதப் படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்கான ஏற்றுமதி வாய்ப்புகள், சான்றிதழ் தேவைகள், தரக்கட்டுப்பாடுகளைப் பின்பற்றுதல், கரிம உற்பத்தி மற்றும் சான்றிதழ் தேவைகள் போன்ற வற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தொழில்முனைவோர், தொடக்க நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

கடந்த நிதியாண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் 80க்கும் மேற்பட்ட பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் சுமார் 8300 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

### கள்ளக்குறிச்சி தொகுதியில்

# ஒன்றிய அரசின் மாதிரி பட்டப் படிப்பு கல்லூரி நிறுவப்படுமா?

## மக்களவையில் – தே.மலையரசன் கேள்வி!

புதுதில்லி, ஜூலை 24-

கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட பின் தங்கிய பகுதிகளில் ஒன்றிய அரசின் மாதிரி பட்டப்படிப்பு கல்லூரிகளை நிறுவுவதற்கு ஒன்றிய அரசு முன்வருமா?



நாடு முழுவதும் கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் 374 மாதிரி பட்டப்படிப்பு கல்லூரிகள் செயல்படுத்த ஒன்றிய அரசு எந்த நடவடிக்கை எடுத்துள்ளது?

தமிழ்நாட்டில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறியப்பட்ட மாவட்டங்கள் எத்தனை அதன் அளவுகோல்கள் என்னென்ன?

தமிழ்நாட்டில் அவ்வாறு அறியப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை எத்தனை? அந்த மாவட்டங்களில் ஒன்றிய அரசின் மாதிரி பட்டப்படிப்பு கல்லூரிகள் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடந்துள்ளதா?

பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றிய அரசின் மாதிரி பட்டப்படிப்பு கல்லூரிகள் அமைப்பதற்காக ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் நிதி ஏதேனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

ஒன்றிய அரசின் மாதிரி பட்டப்படிப்பு கல்லூரிகள் திறப்பதற்கான பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால் அந்த கல்லூரிகளுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்து உள்ளீர்கள் மற்றும் கல்லூரிகளுக்கான போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளதா உளிட்ட பல்வேறு கேள்விகளை எழுப்பி, அதன் விவரத்தினை ஒன்றிய அரசு தருமாறு கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் கேட்டுக்கொண்டார்.

# தமிழ்நாட்டின் மண் வளத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி ஜூலை 24-

மண்வள சுகாதார அட்டை திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் மண்வளத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.



அதன் விவரம் வருமாறு:-

விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் அவர்கள் கூறுவதில் மகிழ்ச்சி அடைவாரா?

(அ) மண் பரிசோதனையின் அதிர்வெண், பகுப்பாய்வு செய்யப்பட்ட அளவுருக்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கும் முறை உள்ளிட்ட மண் சுகாதார அட்டை (SHC) திட்டத்தின் முக்கிய அம்சங்கள் மற்றும் நோக்கங்களின் விவரங்கள்;

(ஆ) உரங்களின் நியாயமான பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கும், பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், உள்ளீட்டு செலவுகளைக் குறைப்பதற்கும் இந்தத் திட்டம் உதவுகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள்;(இ) திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த மண்வள அட்டைகளின் எண்ணிக்கை, ஆண்டு வாரியாக மற்றும் மாவட்ட வாரியாக;

(ஈ)SHC திட்டத்தின் தொடக்கத்திலிருந்து தமிழ்நாட்டிற்கான அதன் கீழ் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு; (உ) தமிழ்நாட்டில் தற்போது செயல்பாட்டில் உள்ள மண் பரிசோதனை ஆய்வகங்களின் எண்ணிக்கை மற்றும் வகை, கிருஷி விஞ்ஞான் மையங்கள் (KVKs), வேளாண் பல்கலைக்கழகங்கள் அல்லது தொகுதி அளவிலான அலுவலகங்களில் நிறுவப்பட்ட நிலையான ஆய்வகங்கள், நடமாடும் மண் பரிசோதனை வேன்கள் மற்றும் மினிஆய்வகங்கள் உட்பட; மற்றும்(ஊ) தற்போதுள்ள மண் பரிசோதனை உள்கட்டமைப்பை மேம்படுத்த அரசு முன்மொழிகிறதா?

இவ்வாறு சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் நகரம், 30 வது வார்டு, ஆசிரியர் நகர் பகுதியில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிறுத்த கட்டிடத்தை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், விழுப்புரம் நகர கழக பொறுப்பாளர்கள் எஸ்.வெற்றி வேல், இரா.சக்கரை, நகர்மன்ற தலைவர் தமிழ்செல்வி பிரபு, நகராட்சி ஆணையர், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் கோல்டு வெங்கடேசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா. கேசவன், நகர துணை செயலாளர் புருஷோத்தமன், நகர இளைஞர் அணி அமைப்பாளர் செ.மணிகண்டன், நகர்மன்ற உறுப்பினர்கள் சத்தியவதி வீரநாதன், புல்லட் மணி, சாந்த ராஜ், வார்டு செயலாளர்கள் வீரநாதன், தங்கம், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஆனந்த் ராஜ், ஆர்டிஸ்ட் அருள், வார்டு கழக நிர்வாகிகள் முருகதாஸ், பாவாடை, வெற்றிவேல், சந்தோஷ், வேளாங்கண்ணி, லதா முருகன், கண்ணன், ரமேஷ், கார்த்திபன், ஜெயபால், பிரசாந்த், ஜூடி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.